சென்னை 22.11.2021

# பழங்குடியின மக்களுக்கு வெள்ள நிவாரணம்

காஞ்சிபுரம், நவ.22-
காஞ்சிபுரத்தில் உள்ள குழந்தைகள் கண்காணிப்பக தொண்டு நிறுவனம் சார்பில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பழங்குடியினருக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கினர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் பழங்குடியின மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து சிரமப்பட்டு வருகின்றனர். மேலும் பாலாற்றில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தால் ஏற்பட்ட போக்குவரத்து தடை காரணமாக பழங்குடியினர் வெளியில் செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர். இந்த நிலையில், காஞ்சிபுரத்தில் உள்ள குழந்தைகள் கண்காணிப்பக தொண்டு நிறுவனம் சார்பில், பழங்குடியின மக்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டது. காஞ்சிபுரத்தை அடுத்த ஆழ்வார்பேட்டை, வயலூர் ஏரி, இளையனார் வேலூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பழங்குடியினருக்கு குழந்தைகள் கண்காணிப்பக நிர்வாகி ராஜ், ராஜ் ஒருங்கிணைப்பாளர்கள் சங்கரி, தீபா ஆகியோர் நிவாரண பொருட்களை வழங்கினர்.